ISSN 0975 - 6973

Volume - 9 November - 2017

## FACET 2K17

# ANNUAL JOURNAL OF RESEARCH

## RESEARCH DEPARTMENTS

( Commerce, Economics, English & Tamil )

## FATIMA COLLEGE (Autonomous)

( College with potential for Excellence)
(Re-Accredited with 'A' Grade by NAAC )
National Level 27th Rank-NIRF 2017
Mary Land, Madurai - 18.



| S.No | # Contents | Page No |
|---|---|---|


| S.No | Title | Page No |
|---|---|---|
| 12. | PHASE OF PATRIARCHY IN CHIKA UNIGWE'S *ON BLACK SISTERS' STREET* AND SEFI ATTA'S *EVERYTHING GOOD WILL COME*<br>**DR.G.PRIYA & MARIYA STEPHY.K** | 163 |
| 13. | TRAUMA AND RECOVERY IN SHYAM SELVADURAI'S *FUNNY BOY* AND NIROMI DE SOYZA'S *TAMIL TIGRESS*<br>**DR.S.SAIRA BANU & SNEHA GEORGE** | 173 |
| 14. | HELON HABILA'S *OIL ON WATER* AND TANURE OJAIDE'S *THE ACTIVIST* A STUDY OF ECO-IMPERIALISM<br>**Dr.MARY MAGDALENE & SELVA JEEVA.M** | 183 |
| 15. | RECLAIMING IDENTITY THROUGH RECONNECTION WITH NATURE IN LINDA HOGAN'S *POWER* AND *SOLAR STORMS*<br>**Dr.A.ROSELIN MARY & VIJAYA VASUKI.S** | 193 |
| 16. | FINDING THE LOST RHYTHM OF LIFE-A QUEST FOR IDENTITY IN SHAILA ABDULLAH'S *SAFFRON DREAMS* AND NAFISA HAJI'S *THE WRITING ON MY FOREHEAD*<br>**DR.S.SAIRA BANU & SINTHIYA.B** | 205 |
| 17. | DISPLACEMENT AND BELONGING IN *THE SECRET RIVER* AND *THE LIEUTENANT* BY KATE GRENVILLE<br>**Dr.S.SAIRA BANU & SHENSHIYA J.A DHAS** | 215 |
| 18. | DAVID KLASS'S THE CARETAKER TRILOGY: F*IRESTORM, WHIRLWIND AND TIMELOCK* : A STUDY OF ECO-TERRORISM<br>**Dr.MARY MAGDALENE & MERCY.S** | 223 |
| 19. | SYMBOLIC INTERACTIONISM IN THE SELECT NOVELS OF NADIA HAṢHIMI<br>**Dr.S.J.KALA & PRIYADHARSHINI.K** | 231 |
| 20. | திலகவதி நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்<br>**முனைவர் சி. சொர்ணமாலா & சே. மெர்லின் மேரி** | 241 |
| 21. | ஐங்குறுநூற்றில் உயிரியல்<br>**முனைவர் க. லதா & மு. கற்பகவள்ளி** | 253 |
| 22. | அகப்பாடல்களில் செலவழுங்கலும் செலவழுங்குவித்தலும்<br>**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி & ர. சங்கீதா** | 267 |
| 23. | பரிபாடலில் கலைகள்<br>**முனைவர் நா. ரேணுகா & சி. சத்யா** | 279 |

# திலகவதி நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்

நெறியாளர் :
**முனைவர் சி.சொர்ணமாலா**
உதவிப் பேராசிரியர்
பாத்திமா கல்லூரி, மதுரை

ஆய்வாளர் :
**சே. மெர்லின் மேரி**

**முன்னுரை**

இன்று பெண்ணிய ஆய்வு மிகப் பரவலாகி வருகிறது. சமூகத் தேவையாக உள்ள பெண்ணியம் அனைத்துத் துறைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது. அடிமைப் படுத்தப்பட்டப் பெண்களிடமிருந்து ஒரு சமூகப் பிரச்சனையாக உருப்பெற்று, இலக்கியத் திறனாய்வில் மிளிரும் அளவுக்குச் சிறப்படைந்துள்ளது. பெண்ணியம் என்ற கோட்பாட்டின்படி சமூகத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் எல்லாத்துறைகளிலும் உரிமைகள் வழங்கப்படுவதோடு நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பில் மதிப்பையும் உருவாக்க முடியும்.

"பெண்ணியம்" பெண்கள் தாமாக முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்க உதவுகிறது. பெண்கள் காலங்காலமாக ஆண்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். இதிலிருந்து விடுபடவும், பெண் பாலியல் சமத்துவம் பெறவும், பெண் ஆணுக்கு அனைத்து நிலைகளிலும் நிகரானவள் என்பதை வலியுறுத்தவும் உதவியாக இருப்பது பெண்ணியச் சிந்தனையாகும்.

" பெண் பிறவி மிக விழுமியது. அப்பிறவியில் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் இயல்புகள் சிறந்து விளங்குகின்றன. பெண்மையினின்றும் தாய்மையும், தாய்மையினின்றும் இறைமையும் மலர்கின்றன" என்ற திரு.வி.கவின் பெண்ணைப் பற்றிய மதிப்பீடு பெண்ணின் இயல்புகளை மேன்மைப் படுத்துவதாய் அமைகிறது. இத்தகைய மேன்மைக்கு நேர்மாறாய்ப் பெண்களின் நடைமுறை வாழ்வில் அவலங்கள் பல அமைகின்றன. வரலாற்று ரீதியான ஆணாதிக்கத்தையும் அதற்கு எதிரான போராட்டத்தையும் கண்டறிய வேண்டுமாயின், மக்களின் பண்பாடு, நடத்தை, வழக்காறு போன்றவற்றையும் ஆராய வேண்டும். அப்பொழுதுதான் எந்தவிதமான போலித்தனமுமின்றி எதார்த்தத்தைக் காணமுடியும். இவ்வகையில் திலகவதி நாவல்களான கல்மரம், தேவை ஒரு தேவதை மற்றும் நெஞ்சில் ஆசை என்பவை ஆய்வு எல்லையாக எடுக்கப்பட்டு, அதில் காணலாகும் பெண்களின் அவலங்களைப் பெண்ணிய நோக்கில் ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.